S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி டிசம்பர் 27 * 2025 * மலர் -1 * இதழ்-209* VOL-1 * ISSUE-209 விலை ரூ.3 * பக்கம் -4

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.1,774 கோடியில் அரசுத் திட்டங்கள்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!!









சென்னை, டிச. 27–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு மாவட்டமாக சென்று அரசுப் பணிகளை ஆய்வு செய்து வருகிறார். அத்துடன் அரசுத் திட்டங்களையும் தொடங்கி வைத்து வருகிறார்.

கடைசியாக அவர் நெல்லை மாவட்டத்திற்குச் சென்றார். அங்கு பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். மேலும் அரசின் நலத்திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.

இதன் அடுத்தக்கட்டமாக கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்தார். அதன்படி இன்று அவர் கள்ளக்குறிச்சிக்கு பயணமாகியுள்ளார்.

இந்த மாவட்டத்தில் சேலம்– சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வீரச்சோழபுரம் என்ற இடத்தில் முற்பகல் 11 மணியளவில் அரசு விழா நடந்தது. அதில் அவர் ரூ.139.41 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 8 தளங்கள் கொண்ட புதிய ஆட்சியர் அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்த அலுவலகத்தில் கருவூலம், வேலைவாய்ப்பு அலுவலகம், மாற்றுத்திறனாளிகள் அலுவலகம், மக்கள் குறைதீர் கூட்ட அரங்கம், தபால் அலுவலகம், வங்கி உள்ளிட்டவை இடம்பெறுகின்றன.

மேலும் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள், இலங்கைத் தமிழர்களுக்கான மறுவாழ்வு முகாம்களில் புதிய வீடுகள், ரேஷன் கடைகள், மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்.

இதைத் தவிர பள்ளிக்கல்வித்துறை சார்பில் ரூ.81.51 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்றைகளை திறந்து வைத்தார். ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டாரப் பொது சுகாதார ஆய்வகங்கள், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் குடிநீர் வசதி உள்ளிட்டவற்றையும் தொடங்கி வைத்தார். மேலும் 2.14 லட்சம் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். மொத்தத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.1,774 கோடி மதிப்பிலான அரசுத் திட்டங்களை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பயணமாகிறார். அங்கு மலப்பான்பாடி என்ற இடத்தில் நடக்கும் அரசு விழாவில் கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடங்கி வைக்கிறார்.







காரியாபட்டி அல்லாளபேரியல் புதிய கலையரங்க கட்டிடத்தை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார்.



வாசுதேவநல்லூர் இராஜபழனி ஆண்டவர் கோவிலில் திருவாதிரை திருநாளை முன்னிட்டு பஜனை குழுவினர் திருவீதி உலா நடைபெற்ற போது எடுத்தப் படம்



கல்லிடைக்குறிச்சி அருகே மணிமுத்தாறு அருவியில் சீராக தண்ணீர் விழுவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை அனுமதி அளித்துள்ளது.

## தூத்துக்குடி அருகே

# பாத யாத்திரை சென்ற 3 பெண்கள் சாவு!

## கார் மோதியது!!

தூத்துக்குடி, டிச. 27

திருச்செந்தூர் அருகே வீரபாண்டியபட்டினத்தைச் சேர்ந்த சீதையம்மாள் தலைமையில் செந்தில் வீதி,நட்டாத்தி, அதன் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கடந்த 40 ஆண்டுக ளாக குழுவாக சேர்ந்து இருக்கன்குடி மாரியம்மன் கோயிலுக்கு மாலை அணிந்து விரதமிருந்து பாத யாத்திரை சென்று வருகின்றனர். நிகழாண்டு இதே பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒன்றிணைந்து வீரபாண்டியபட்டினத்திலிருந்து பாத யாத்திரை யாக இருக்கன்குடிக்கு புறப்பட்டனர். தூத்துக்குடி குறுக்குச்சாலை அரசு மேல்நிலைப் பள்ளி அருகே நேற்று மாலை நடந்துசென்று கொண்டி ருந்த இவர்கள் மீது பின்னால் அதிவேகமாக வந்த கார் மோதியது.

இதில் திருச்செந்தூர் அருகே கரம்பன்விளையைச் சேர்ந்த சுந்தரம் மனைவி கஸ்தூரி (55), வீரபாண்டி யபட்டினம் ராமமூர்த்தி மனைவி சுந்தர்ராணி (60) ஆகியோர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

காய மடைந்த வீரபாண்டியபட்டினத்தைச் சேர்ந்த வடி வேல் மனைவி இசக்கியம்மாளை (55) ஓட்டப்பிடாரம் போலீஸார் மீட்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். ஆனால், அவர் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார். கார் ஓட்டுநரான தஞ்சாவூர் வடக்கு வாசல் பகுதியைச் சேர்ந்த முத்துராஜ் மகன் ராம் பிரசாத்திடம் (32) போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புதிய உச்சத்தில் தங்கம்:

# வெள்ளி விலையும் மின்னல் வேகத்தில் உயர்வு!

சென்னை, டிச. 27–



தங்கமும் வெள்ளியும் போட்டி போட்டுக் கொண்டு விலை உயர்வை சந்தித்து வருகின்றன. முன்பு தங்கம் மட்டுமே அதிவேகத்தில் உயர்ந்து வந்தது. வெள்ளியின் விலை ஏற்றம் சுமாராகவே இருந்து வந்தது. ஆனால் சமீப நாட்களாக தங்கத்தின் வேகத்தைவிட வெள்ளியின் வேகம் அதிகமாக உள்ளது. டிசம்பர் 17–ஆம் தேதியன்று ஒரு கிராம் வெள்ளியின் விலை ரூ.222 ஆக இருந்தது. 23–ஆம் தேதி ரூ.234 ஆக அதிகரித்தது. 24–ஆம் தேதி ரூ.10 அதிகரித்து ரூ.244 ஆக மாறியது. நேற்று ஒரு ரூபாய் அதிகரித்தது. இன்று ரூ.9 அதிகரித்து ரூ.254 ஆக மாறியது. தங்கத்தின் விலையிலும் பவுனுக்கு ரூ.560 அதிகரித்து ரூ.ஒரு லட்சத்து 3,120 ஆக உள்ளது. ஒரு கிராம் விலை ரூ.12,890 ஆகும். ஆகவே இந்த விலையும் புதிய உச்சம் ஆகும்.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தை அடுத்த அத்தனூர் பேரூர் தி.மு.க., சிறுபான்மையினர் அணி சார்பில் நடந்த கிறிஸ்துமஸ் விழாவில் அமைச்சர் மதிவேந்தன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் அத்தனூர் பேரூர் செயலாளர் கண்ணன், துணை செயலாளர் விஜயகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கைமாவட்டம், பள்ளத்தூர்பேரூராட்சிக்குட்பட்ட அ.செ.மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். அருகில் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட கல்வி அலுவலர் மாரிமுத்து, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் சையது முகைதீன் இப்ராகிம், பள்ளி தலைமை ஆசிரியர் வினைதீர்த்தாள் மற்றும் பலர் உள்ளனர்.



கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் காவிரி ஆற்றில் பரிசல் சவாரி செய்து மகிழ்ந்தனர்.



# புதுக்கோட்டை அருகே ஆலங்குடியில் அமைச்சர் மெய்யநாதன் தலைமையில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்!

புதுக்கோட்டை.டிச.27

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் அமைச்சர் மெய்யநாதன் தலைமையில் கிறிஸ்மஸ் விழா தேவலாயத்தில் நேற்று கொண்டா டப் பட்டது.விழாவிற்கு தொழிலதிபர் ஜெ,குருப்ஸ் கல்வி நிறுவன ங்களின் தலைவர் சேசுதாஸ் பேரூராட்சி தலைவர் ராசி முருகானந் தம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஆலங்குடி புனித அதிசய அன்னை ஆலயத்தில் தமிழ்நாடு பிற்படு த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்கிறிஸ்துமஸ்தினவிழாவை முன்னிட்டு கிறிஸ்துவ மக்களோடு தேவாலய த்தில் கேக் வெட்டியும் கேக் கொடுத்தும் உற்சாகமாக கொண்டாடி பிறந்த ஏசுவுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி சாமி தரிசனம் செய்தனர்.

அருட்தந்தையர்கள் குழந்தைராஜ் உதவி துணை பங்குத்தந்தை பனிமய தாஸ் ஏசு பிறப்பு நிகழ்ச்சிகளை பொதுமக்களுக்கு எடு த்துரைத்தார்கள்.

ஆலங்குடி பகுதிகளில் உள்ள தேவலாயங்களில் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து தேவா லயங்களிலும் கிறிஸ்தவ மக்கள் கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் உள்ள புனித அதிசய அன்னை ஆலயத்தில் நள்ளிரவு முதல் ஏசு பிறப்பு தினமான கிறிஸ்துமஸ் தின விழாவை கிறிஸ்துவ மக்கள் ஒன்றிணைந்து கோலாகலமாக நடத்தப்பட்டது.மேலும் நேற்று கா லை தேவாலயத்தில் அருட்சகோதரிகள் மற்றும் அருட்தந்தையர் கள் ஆகியோர் கூட்டுப்பாடல் திருப்பலி பூஜை நடைபெற்றது.

இந்நிலையில் ஆலங்குடி புனித அதிசய அன்னை ஆலயத்திற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு பிற்படுத்தப்பபட்டோர்நலத்துறைஅமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தேவாலய பூஜையில் இருந்த அனைத்து கிறிஸ்துவ மக்களுக்கும் ஏசு பிறந்த கிறிஸ்மஸ் தின விழாவாக கொண்டாடி வரும் கிறிஸ்தவ பொது மக்களுக்கு ஹாட் பாக்ஸ் 500க்கும் மேற்பட்டோருக்கு வழங்கினார்கள்.

# குன்னூர் அருகே குடிபோதை தகராறில் வாலிபர் அடித்து கொலை!
## வட மாநிலத்தை சேர்ந்தவர்!!

குன்னூர், டிச.27

வட மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் குடிபோதையால் வாய் தகராறு ஏற்பட்டு கை கலப்பாய் மாறியதில் அடித்தே கொலை செய்யப்பட்டார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் கிளன்டேல் எஸ்டேட்டில் பகுதியில் வட மாநிலமான ஜார்கண்ட் டை சேர்ந்த ராம் பிரஸ் ஒரான் வயது 25 தகப்பனார் பெயர் தாசை ஒரான் மனைவி பெயரை சுனிதா இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக கிளன்டேல் எஸ்டேட்டில் தோட்ட தொழிலாளியாக பணியில் சேர்ந்தா.இவருக்கு ஒரு மகன் அயன் ( 5).



கடந்த 10 நாட்களுக்கு கிளன்டல் பகுதியில் இறந்தவர் உடலை அடக்கம் செய்து விட்டு.தன் நண்பருடன் வீட்டிற்குவழியில்அமர்ந்துள்ளார். அப்போது அந்த வழியாக விசுவலிங்கத்திற்க்கு வழி விடாமல் அமர்ந்துள்ளனர்.

அப்பொழுது விசுவலிங்கம் வழி விடுமாறு சண்டை போட்டுள்ளார், பின்புசண்டை கைகளைப்பாக மாறியது. அருகில் உள்ளவர்கள் சமாதானம் செய்து இவ இருவரையும்வீட்டிற்கு அனுப்பினர். அன்று இரவு மீண்டும் விஸ்வலிங்கம் வயது 55 எசக்கி ராஜா வயது 48 மணிகண்டன் வயது 16 என்பவருடன் மது போதையில் வாக்குவாதம் ஏற்பட்டது இதில் விஸ்வலிங்கம் எசக்கி ராஜா மணிகண்டன் மூன்று பேரும் சேர்ந்து ராம் பிளஸ் ஓரனை கட்டையாலும் தலைக்கவசத்தாலும் தாக்கியதில் தலை உடல் பாகத்தில் காயங்கள் ஏற்பட்டது. மறுநாள் காலை ராம் பிரஸ் ஒரான் நிர்வாக சொந்தமான முதல் உதவிதவி மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டது. மேலும் காயம் தீவிரம் அறிந்து எஸ்டேட் நிர்வாகம் மேல் சிகிச்சைக்கு குன்னூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.மேலும் காயம் பெரிதாக இருந்ததாலும் மேல் கிச்சனை அவருக்கு தேவைப்படுவதால் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு பத்து நாட்களாக சிகிச்சை அளிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தார். மேலும் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு தேவையான உதவிகளை கிளன்டேல் நிர்வாகத்தின் மூலம் அனைத்து உதவிகளும் வழங்கியது. மேலும் அவருடைய உடலை சொந்த மாநிலமான ஜார்கண்டுக்கு எடுத்துச் செல்ல எஸ்டேட் நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது அதுக்கு உண்டான செலவை எஸ்டேட் நிர்வாகம் ஏற்றுக்கொள்வது.

நடந்த நிகழ்வை அனைத்தையும் நிர்வாகத்தால் காவல்துறைக்கு தகவல் கொடுத்து உடனே சம்பவ இடத்திற்கு குன்னூர் காவல் துறை துணை கண்காணிப்பாளர் தலைமையில் உடலை கைப்பற்றி தீவிர விசாரணை செய்து இந்த கொலைக்கு வேறு ஏதேனும் காரணம் இருக்கிறதா என்று தீவிர விசாரணை செய்வதுடன் கொலை செய்தவர்களை கைது செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.







# காவேரிபட்டினத்தில் எம்.ஜி.ஆர். நினைவு நாள் அனுசரிப்பு!

காவேரிப்பட்டினம், டிச.27

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டினம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கிருஷ்ணன் தலைமையில் எம்ஜிஆர் அவர்களின் 38 வது நினைவஞ்சலியை முன்னிட்டு பென்னேஸ்வரமடம் கிராமத்தில் அவருடைய திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் கோ.ரவிச்சந்திரன், நாகரசம்பட்டி பேரூராட்சி செயலாளர் அண்ணாதுரை, ராஜா அண்ணாமலை, ஒன்றிய இணைச் செயலாளர் குணசேகரன், ஆவத்துவாடி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஏ.ஜி. மணி, மன்னன், அண்ணாதுரை, பவித்திரன், மனோகரன், செந்தில்,ரவி, சந்திரன் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட கழக தொண்டர்களும் உடன்பிறப்பு கலந்து கொண்டனர்.



# தாராபுரத்தில் கிறிஸ்துமஸ் விழா; கயல்விழி செல்வராஜ் பங்கேற்றார்!

தாராபுரம், டிச.27

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் கிழக்கு ஒன்றியத்துக்குட்பட்ட கொளத்துப்பாளையம் பேரூர் ஏலிம் பெரக்கா தீர்க்க தரிசன திருச்சபையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருநாள் நிகழ்வில் தமிழ்நாடு மனித வள மேலாண்மை துறை அமைச்சர், மாநில மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் , தாராபுரம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.துரைசாமி பங்கேற்று சிறப்புரையாற்றி அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

உடன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வராஜ் , தாராபுரம் நகரக் கழக செயலாளர் முருகானந்தம், தாராபுரம் நகர் மன்ற தலைவர் பாப்புகண்ணன், தாராபுரம் ஒன்றிய துணை செயலாளர் செல்வகுமார், கொளத்துப்பாளையம் பேரூர் தலைவர் சுதாகருப்புசாமி, திருப்பூர் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஹைடெக். அன்பழகன், ஆனந்தி, கொளத்துப்பாளையம் பேரூர் கவுன்சிலர் சுந்தரலிங்கம், கொளத்துப்பாளையம் பேரூர் துணை செயலாளர் குப்புசாமி, தாராபுரம் கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி கார்வேந்தன், பரக்கத் அலி,தாராபுரம் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகி கண்ணன்(எ)பால சுப்பிரமணியம் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மத்திய அரசை கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்!



திருக்கோவிலூர் டிச.27

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஏழைகளின் வாழ்வாதாரத்தை குழி தோண்டி புதைத்த மத்திய அரசை கண்டித்து அங்கதான் சார் பட்ட முற்போக்கு கூட்டணி சார்பில் 500 கற்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய அரசு கொண்டுவந்த 100 நாள் வேலை திட்டத்தில் சுந்தரப் போராட்ட தியாகி அண்ணன் காந்தியடிகளின் பெயரை நீக்கி ஒரு நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் நோக்கத்தோடு சட்டம் கொண்டு வந்த மத்திய பாஜக அரசு மற்றும் ஒத்து ஊதும் அதிமுகவை கண்டித்து பேசினர்.

திமுக ஒன்றிய கழக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் மற்றும் கொள்கைபரப்பு செயலாளர் பெருனர்கிள்ளி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ராமசாமி திமுக ஒன்றிய கழக செயலாளர் அய்யனார் எம் ஆர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்ட கண்டன உரையாற்றினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திமுக இந்திய கம்யூனிஸ்ட் விடுதலை சிறுத்தைகள் தமிழக வாழ்வுரிமைக் கட்சி குறித்த பல்வேறு கூட்டணி கட்சிகள் கலந்து கொண்டு மத்திய அரசை கண்டித்து மத்திய அரசு கொண்டுவந்த சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.

# போதை பொருட்கள் விற்ற 3 பேர் கைது!

ஈரோடு,டிச.27–

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி அடுத்து பவானிசாகர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகளில் தொ டர்ந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஹான்ஸ் குட்கா பான் மசாலா போன்ற போதைப்பொருட்கள் தொடர்ந்து விற்பனை செய்து வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்ததின் பேரில் சத்தியமங்கலம் டி,எஸ்,பி முத்தரசு தலைமையில் போலீசார் தீவிரமாக வாகன சோதனையில் ஈடுபட்டு கண்காணித்து வருகின்றனர் . இந்த நிலையில் முடுக்கன் துறை பகுதியில் உள்ள ராஜேந்திரன் வயது 52 என்பவரது மளிகை கடையில் ஹான்ஸ் 4,800 கூல் லிப் ஒரு கிலோ, விமல் பாக்கு 2,775 மொத்தம் 6,818 மதிப்பு ரூபாய் 7,816, மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த ரமேஷ் குமார் வயது 46 என்பவரது மளிகை கடையில் ஹான்ஸ் 3,300 ஸ்கூல் லிப் 2,318 விமல்1,200 மதிப்பு ரூபாய் 8,024 மற்றும் பட்டராமங்கலம் புதுப்பீர் கடவு பகுதியைச் சேர்ந்த நந்தகுமார் வயது 28 என்பவரது மளிகை கடையில் ஹான்ஸ் 2.620 கூல் லிப் 280 விமல் பாக்கு 625 டோட்டல் 3.273 மதிப்பு ரூபாய் 2, 234 மொத்தம் மளிகை கடைகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஹான்ஸ் குட்கா விமல் பாக்கு போன்ற போதை பொருட்கள் 18.4 கிலோ போலீசார் பறிமுதல் செய்து தொடர்ந்து ஹான்ஸ் குட்கா பான் மசாலா போன்ற போதை பொருட்களை தொடர்ந்து விற்பனை செய்து வந்த குற்றத்திற்காக மூன்று நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர் அதேபோல் புஞ்சை புளிய ம்பட்டி சுற்று வட்டார பகுதியில் உள்ள மளிகை கடை மற்றும் பெட்டிக் கடைகளில் ஹான்ஸ் குட்கா பான் மசாலா போன்ற போதை பொருள் விற்பனை அமோகமாக செய்து வருவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.





# குன்னூரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

குன்னூர், டிச.27

நீலகிரி மாவட்ட குன்னூர் சட்டமன்றத்தொகுதி, மேலூர் ஒன்றியத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக் தலைமையில் 100 நாள் வேலை திட்டத்தை முற்றிலுமாக முடக்க நினைக்கும் ஒன்றிய பாஜக அரசு, அதற்கு ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில்

மேலூர் ஒன்றிய கழக செயலாளர் லாரன்ஸ், குன்னூர் நகர கழக செயலாளர் எம்.இராமசாமி , கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை செயலாளர் பா.மு.வாசிம் ராஜா, பொதுக் குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, உலிக்கல் பேரூர் கழக செயலாளர் ரமேஷ், வெலிங்டன் நகரிய கழக செயலாளர் மார்டீன், மாவட்ட காங்கிரஸ் தலைவர் பாலன், மாவட்ட காங்கிரஸ் பொதுசெயலாளர் மேலூர் மணி, தலைமை கழக பேச்சாளர்கள் முரசொலி வெங்கடேஷ், ஜாஹீர்உசேன் , ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கிருஷ்ணன், எஸ். மணிகண்டன் , காசோலை மோகன், பாலன், உமாபதி, தாஸ் , நகர இளைஞரணி அமைப்பாளர் சையது மன்சூர் , ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜன், உமாபதி,அன்பழகன், பாலசுப்பிரமணி, மோகன், நாகராஜ், அப்துல் காதர், நந்தகுமார், குமரேசன் , .மணி,க்ளாரா, மோகன்,ஜான்,யசோதா, லலிதா, கௌரி, மனேஷ் குமார், அப்பாஸ், அபீப் ரஹ்மான், ஏஞ்சலின், குமரேசன், நாகேந்திரன், சுகுமார், முகம்மது தௌபிக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்கள் கலந்துக்கொண்டனர்.

# வாழப்பாடியில் குல தெய்வமாக வழிபட்டு வந்த 17-ம் நூற்றாண்டு சதிக்கல் கண்டுபிடிப்பு!

வாழப்பாடி, டிச.27

சேலம் மாவட்டம் வாழப்பாடியில், 17–ஆம் நூற்றாண்டில் மக்கள் நலனுக்காக உயிர்நீத்த தலைவன் மற்றும் தலைவியின் தியாகத்தை போற்றும் வகையில் வைக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க சதிக்கல் ஒன்றை, 300 ஆண்டுக்கும் மேலாக மக்கள் பாதுகாத்து வழிபட்டு வருவதை, சேலம் வரலாற்று ஆய்வு மையத்தினர் கண்டறிந்துள்ளனர்.

17,18–ஆம் நூற்றாண்டு காலத்தில் பல்வேறு காரணங்களினால் உயிரிழந்து போகும் ஆண்மகனுக்கு மூட்டிய தீயில் பாய்ந்து அவரது மனைவியும் உயிரிழக்கும் உடன்கட்டை ஏறும் பழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது.

இதுகுறித்து சேலம் வரலாற்று ஆய்வு மையத்தினர் கூறியதாவது:

சேலம் மாவட்டத்தில், 300 ஆண்டுக்கு மேல் பழமையான வரலாற்று சிறப்புமிக்க சதிக்கற்கள் அரிதாகவே காணப்படு கின்றன. வாழப்பாடி அடுத்த மத்தூர் மாரியம்மன் கோயிலில் ஒரு சதிக்கல் இன்றளவிலும் வழிபாட்டில் இருந்து வருவதை, சேலம் வரலாற்று ஆய்வு மையத்தை சேர்ந்த முனைவர். பெரியார்மன்னன் கண்டறிந்து ஏற்கனவே ஆவணப்படுத்தியுள்ளார்.

தற்போது வாழப்பாடி பேரூராட்சி வடக்குகாடு பகுதியில் விவசாயி சிவக்குமார்(35).


என்பவரது தோட்டத்தில் 17 அல்லது 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களுக்கு நன்மை செய்வதற்காக உயிரிழந்த ஒரு ஆண்மகன் மற்றும் அவரது பிரிவை தாங்காமல் உடன்கட்டையேறிய அவரது மனைவியின் தியாகத்தை போற்றும் வகையில் வைக்கப்பட்டுள்ள சதிக்கல் ஒன்றை சிறிய கோயில் அமைத்து பாதுகாத்து, இப்பகுதி மக்கள் கட்டையக்கவுண்டர் என்ற பெயரில் குல தெய்வமாக கருதி வழிபட்டு வருவதை



கண்டறிந்துள்ளார்.

3 அடி உயரம் கொண்ட இந்த சதிக்கல்லில், உடலில் அழகிய ஆபரணங்கள், தலையில் கொண்டை இடுப்பில் கூர் வாளுடன் இருகரம் கூப்பி கும்பிட்டவாறு ஆண்மகன் உருவமும், அருகிலேயே மேல்நோக்கியஇடதுகையில்மலரும், கீழ் நோக்கிய வலது கையில் மதுக்குடுவையும் வைத்துள்ளவாறு பெண்ணின் உருவமும் வடிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, இந்த சதிக்கல்லுக்கு அருகில் உருவம் தெரியாத அளவிற்கு சிதைந்து போன இரு நினைவுக் கற்களும் காணப்படுகிறது. வரலாற்று சிறப்புமிக்கஇந்தசதிக்கலைஇப்பகுதி மக்கள் 300 ஆண்டுக்கும் மேலாக பாதுகாத்து வழிபட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்' என்றனர்.

# சல்மான் கானின் பிறந்தநாளை முன்னிட்டு பீயிங் ஹ்யூமன் குளோத்திங் 50% அதிரடி தள்ளுபடி விற்பனை அறிவிப்பு!




சென்னை, டிச.27

பீயிங் ஹ்யூமன் குளோத்திங் (Being Human Clothing) பிராண்டு, நிறுவனர் சல்மான் கானின் பிறந்தநாளை முன்னிட்டு நாடு முழுவதும் 50% வரை சிறப்பு தள்ளுபடி விற்பனையை அறிவித்துள்ளது. “Cake Fake, Birthday For Real” என்ற தலைப்பிலான கலகலப்பான புதிய விளம்பரத்தின் மூலம், சல்மானின் எனர்ஜி, மகிழ்ச்சி மற்றும் ரசிகர்களுடன் உள்ள நெருக்கத்தை கொண்டாடும் விதமாக இந்த பிறந்தநாள் விற்பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விளம்பரத்தில் நடிகர் சுனில் குரோவர் சல்மான் கானைப் போல நடித்து ரசிகர்களை சிரிக்க வைக்க, பின்னர் சல்மான் கான் தானே தோன்றி பிறந்தநாள் சலுகைகளை அறிவிப்பது விளம்பரத்திற்கு கூடுதல் உயிர் அளிக்கிறது. பாரம்பரிய கொண்டாட்டங்களைக் கடந்து, ஆச்சரியமும் மகிழ்ச்சியும் நிறைந்த அனுபவமாக இந்த முயற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பீயிங் ஹ்யூமன் குளோத்திங் பிராண்டின், ஃபோர் ஏசஸ் ஃபேஷன் ஹவுஸ் பிரிவின் நிர்வாக இயக்குனர் அயான் அக்னிஹோத்ரி கூறுகையில், “இந்த பிறந்தநாள் விற்பனை, ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை பகிரும் ஒரு டிஜிட்டல் தருணமாக உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்டோர் மற்றும் ஆன்லைனில் 50% சிறப்பு தள்ளுபடியுடன், எங்களை தொடர்ந்து ஆதரிக்கும் அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கும் முயற்சிதான் இது,” என்றார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



மத்திய அரசை கண்டித்து திருத்தணி கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பா,ஆர்த்திரவி தலைமையில் கண்டனஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான திருத்தணி எம், பூபதி,கலந்துகொண்டு, கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் நகராட்சி துணைத் தலைவர் ஆ.சாமி ராஜ் மற்றும் கூட்டணி கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.

## நூறு நாள் வேலை திட்டத்தில் மகாத்மாகாந்தி பெயர் நீக்கபட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து உடுமலையில் திமுகவினர் கண்டன ஆர்பாட்டம்!



உடுமலை டிச .27

திருப்பூர் மாவட்டம் உடுமலையில் நகராட்சி அலுவலகம் முன்பு 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் உள்ள அண்ணல் காந்தியாடிகளின் பெயரை நீக்கி நூறு நாள் வேலை திட்டத்தை ஒழிக்கின்ற வகையில் சட்டத்தை கொண்டு வந்துள்ள ஒன்றிய பாஜக அரசையும் அதற்கு உறுதுணையாக உள்ள அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கேஈஸ்வரசாமி தலைமையில் மாபெரும் கண்டன முழக்க ஆர்ப்பாட்டமானது நடைபெற்றது.

நூறு நாள் வேலைதிட்டத்தில் ஏழை எளிய மக்கள் பயண்பெற்றதாகவும் சாலைகள் குளங்கள் செப்பனிடபட்டுகிராம பொருளாதாரம் உயர்ந்ததாகவும் என்னிலடங்க பயண்களை தந்த நூறு நாள் வேலைதிட்டத்தை முடக்கிட மத்திய அரசு பல முயற்சிகளை எடுப்பதாகவும் அதற்கு அதிமுகவும் உறுதுணையாக இருப்பதாகவும் கூட்டத்தில் பேசியவர்கள் குற்றம் சாட்டினர்

இறுதியாக நூறு நாள் வேலைதிட்டத்தில் மகாத்மா காந்தி பெயரை சேர்க்க கோரியும் மத்திய அரசு மற்று அதிமுகவிற்கு எதிராக கோசங்கள் எழுப்பபட்டது

இந்நிகழ்வில் நகர கழக செயலாளர் வேலுச்சாமி உடுமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் உளீனீ தங்கராஜ் (எ) உளீ மெய்ஞானமூர்த்தி உடுமலை மத்திய கழக ஒன்றிய செயலாளர் செந்தில்குமார்

வழக்கறிஞர் தம்பி பிரபாகரன் வி.சி.க ஈரோடு மண்டல செயலாளர் ஜல்லிபட்டி முருகன் உட்பட கூட்டணி கட்யினர் மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள் கழக அமைப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் திரளாக கலந்து கொண்டனர்.

## நெமிலி பேருந்து நிலையத்தில் 100 நாள் வேலை திட்டத்தின் பெயரை மத்திய அரசு மாற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டம்!



இராணிப்பேட்டை, டிச.27

100 நாள் வேலை திட்டத்தில் மகாத்மா காந்தி பெயரை நீக்கியதற்கு கண்டனம் தெரிவித்து நெமிலியில் திமுக மற்றும் கூட்டணி கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்தியா முழுவதும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் நடைபெற்று வந்தது. இந்த திட்டம் ஏழை மக்களுக்கு பெரும் உதவியாக உள்ளது. இந்நிலையில் இந்த திட்டத்தின் பெயரை மத்திய பாஜக அரசு நீக்கிவிட்டு வேறொரு பெயரை வைத்துள்ளனர். இதற்கு திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சியான காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம் உள்ளிட்ட கட்சியினர் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. நெமிலி ஒன்றிய குழு தலைவரும் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளருமான வடிவேலு தலைமை வகித்தார். நெமிலி திமுக செயலாளர்கள் பெருமாள், ரவீந்திரன், மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் சுந்தரம்மாள் பெருமாள், நெமிலி பேரூர் செயலாளர் ஜனார்த்தனன், நகர வர்த்தக அணி அமைப்பாளர் ராகேஷ் ஜெயின் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய துணை செயலாளர் முஹம்மது அப்துல் ரகுமான் வரவேற்றார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் நெமிலி ஒன்றிய திமுக செயலாளர்கள், விசிக மண்டல பொறுப்பாளர் வழக்கறிஞர் தமிழ்மாறன், திமுக மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானி வடிவேலு மற்றும் பலர் பேசினர்.ஒன்றிய அவைத் தலைவர் நரசிம்மன், ஒன்றிய துணை செயலாளர்கள் சீனிவாசன் தமின் அன்சாரி மற்றும் 100 நாள் வேலை திட்ட பெண் தொழிலாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## படூர் இந்துஸ்தான் கலை, அறிவியல் கல்லூரியில் கிறிஸ்துமஸ் விழா!





செங்கல்பட்டு, டிச. 27

செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கத்தை அடுத்த படூரில் இயங்கிவரும் இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (23.12.2025) அன்று கிறிஸ்துமஸ் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக எம்.ஆர்.எப். நிறுவனத்தின் மேலாளர் ஆல்பர்ட் சாமுவேல் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார். நிகழ்வின் தொடக்கமாக விழா ஒருங்கிணைப்பாளர் எலிசபெத்ராணி இறைவேண்டல் செய்தார்.

தொடர்ந்து கல்லூரி முதல்வர் முனைவர் உத்திரா த. வரவேற்புரையாற்றினார். அவர் பேசுகையில்: கிறிஸ்துமஸ் விழா என்பது, அனைவருக்கும் உதவுதலையும் அனைவரிடமும் கனிவுடன் நடந்து கொள்ளுதலையும் மையமிட்டுள்ளது என்றார். அவரைத் தொடர்ந்து கல்லூரியின் இயக்குநர் மருத்துவர் சூசன் வர்கீஸ் வாழ்த்துரை வழங்கினார். அவ்வுரையில் நமக்கு அமைதியைக் கொடுக்கக் கடவுள் தன்னுடைய மகனையே பரிசாக அளித்தார் என்று குறிப்பிட்டார். மேலும் உண்மையான கிறிஸ்து பிறப்பு இனிப்பு, அலங்காரங்களில் இல்லை கடவுளின் அன்பை மற்றவருக்குக் கொடுப்பதில்தான் உள்ளது என்று குறிப்பிட்டுப் பேசினார். அவரைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில்: 'கடவுளின் பிறப்பு அனைத்து மக்களுக்கும் நற்செய்தி' எனவும் அவர் தாழ்மையின் அடையாளமாகப் பிறந்தார் எனவும் திருமறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டுப் பேசினார்.

கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அலங்கரிப்பு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் மாணவர்களுக்குக் கல்வி ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டன. இவ்விழாவில் கல்லூரிப் பாடகர் குழுவின் பாடல்களும், மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் விழாவை மேலும் சிறப்பித்தன. கல்லூரித் துணைமுதல்வர் (நிர்வாகம்) சாமுவேல் சம்பத்குமார் நன்றியுரையாற்ற, துணை இயக்குநர் வி.ஜெ. பிலிப் நிறைவு இறைவேண்டல் செய்ய விழா இனிதே நிறைவுற்றது.

### வாணியம்பாடி அருகே

## ஒரிசா மாநிலத்தில் இருந்து கஞ்சா கடத்தி வந்த கேரளா வாலிபர் கைது! காவல்துறையினர் நடவடிக்கை!!





வாணியம்பாடி டிச.27

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பேருந்து நிலையத்தில் ஒரிசா மாநிலத்திலிருந்து கஞ்சா கடத்தி வருவதாக திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவு பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன் அடிப்படையில் பேருந்து நிலையத்தில் சந்தேகத்திற்கு இடமான வகையில் இருந்த நபரை பிடித்து விசாரணை செய்ததில் அவர் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்துள்ளார்.

அதனை அவர் கொண்டுவந்த இரண்டு டிராவல் பேக்கை சோதனை செய்தபோது கஞ்சா இருப்பது தெரியவந்தது.

அதனை தொடர்ந்து அவரை கைது செய்த போலீசார் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பின்னர் காவல் ஆய்வாளர் ஆனந்தன் தலைமையிலான போலீசார் அவரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டதில் கேரளா மாநிலம் தளக்காடு மல்லாபூரம் தெக்கான் குட்டூர், அருகே சையாத் அலிகுட்டி மகன் அஸ்பாக் (வயது 28) என்பது தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து அவர் தொடர்ந்து ஒரிசா மாநிலத்தில் இருந்து கஞ்சாவை கடத்தி விற்பனை செய்வதற்காக எடுத்து வந்தது தெரிய வந்தது.

அவரிடம் இருந்த இரண்டு டிராவல் பேக்கில் 14 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார் அவர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைத்தனர்.

மேலும் இதில் தொடர்புடைய மேலும் ஐந்து பேரை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.



### பாலக்கோடு அருகே

## வன விலங்குகளை கொல்ல நாட்டு வெடி வைத்த இருவர் கைது!

தர்மபுரி,டிச.27

தர்மபுரிமாவட்டம், பாலக்கோடு அருகே உள்ள எலுமிச்சனஅள்ளி காப்புகாட்டில் முயல், காட்டுபன்றி உள்ளிட்ட வன விலங்குகளை வேட்டையாட அந்தேரிகாடு கிராமத்தை சேர்ந்த சேட்டு (45) மாது (45) ஆகியோர் நேற்று முன்தினம் இரவு நாட்டு வெடிகுண்டுகளை வைத்து விட்டு வந்துள்ளனர்,

நேற்று காலை வனவிலங்கு வெடியில் வன விலங்குகள் சிக்கியுள்ளதா என்பதை பார்க்க இருவரும் வனபகுதிக்கு சென்றுள்ளனர். அப்போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த வன காவலர்கள் சந்தேகத்தின் பேரில் இருவரையும் பிடித்து விசாரித்ததில் வன விலங்குகளை வேட்டையாடி வருவதும்,

அதற்காக 10 நாட்டு வெடிகுண்டுகளை வன பகுதியில் பதுக்கி வைத்திருப்பதும் தெரிய வந்தது, அதனை தொடர்ந்து வெடிகுண்டுகளை கைப்பற்றி இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தர்மபுரி சிறையில் அடைத்தனர்.



தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், முத்துலாபுரம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



## வத்தலக்குண்டுவில் காங்கிரஸ் கட்சி சார்பில் தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் விழா!

வத்தலகுண்டு,டிச.27

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட சிறுபான்மை துறை சார்பில் மதநல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக தேவாலயத்தில் கேக் வெட்டி கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. வத்தலகுண்டு திண்டுக்கல் ரோட்டில் உள்ள தேவாலயத்தில் மாவட்டத் தலைவர் கனவாபீர் அப்துல்காதர் தலைமையில் பாதிரியார் முன்னிலையில் கிறிஸ்மஸ் விழா கேக் வெட்டி ஒருவருக்கொருவர் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டு சந்தோஷ கிறிஸ்மஸ் என கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் கோபால், மாவட்டத் துணைத் தலைவர் அப்துல் அஜீஸ், நகரச் செயலாளர் முகமதுரபீக், சிறுபான்மை துறை மாவட்ட துணைத் தலைவர் பரக்கத்துல்லா, முஜிபுர்ரகுமான், சுல்தான், தர்வீஸ், பாண்டியன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



### ராமநாதபுரத்தில்

## குளோபல் மிஷன் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆராய்ச்சி மையத்தை அமைச்சர் பெரிய கருப்பன் தொடங்கி வைத்தார்!

ராமநாதபுரம், டிச.27

காரைக்குடி குளோபல் மிஷன் மருத்துவமனை ஆராய்ச்சி மையத்தின் 9வது கிளை திறப்பு விழா ராமநாதபுரத்தில் நேற்று (டிச.25) நடந்தது.

அதிநவீன உலகத்தரமான ஒருங்கிணைந்த மருத்துவ மையமாக உருவெடுக்கவுள்ள காரைக்குடி குளோபல் மிஷன் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆராய்ச்சி மையத்தின் 9 வது கிளை ராமநாதபுரத்தில் நேற்று திறக்கப்பட்டது.

மருத்துவமனை சேர்மன் மருத்துவர் குமரேசன் வரவேற்றார். கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், நகர்மன்றத் தலைவர் ஆர்.கே. கார்மேகம், துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், நகர்மன்ற உறுப்பினர் பி ஆர் என் கோபால் (ஏ) ராஜாராம் பாண்டியன் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றினர்.

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் திறந்து வைத்து மருத்துவமனைக்கு வருவோருக்கு வழங்கப்படும் சிகிச்சைகள், உலகத்தர மருத்துவ உபகரணங்கள், ஆய்வகம் உள்ளிட்ட வசதிகள் குறித்து கேட்டறிந்தார். இதில் கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ஜூனு, துணைப் பதிவாளர் ராஜகுரு, ராமநாதபுரம் சமஸ்தான ராஜா நாகேந்திர சேதுபதி, ராமநாதபுரம் வர்த்தகர்கள் சங்கத் தலைவர் ஜெகதீசன், நகர்மன்ற உறுப்பினர்கள் காளிதாஸ், இந்திரா மேரி செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவர் செந்தில்குமார் தலைமையில் மருத்துவமனை நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்தனர். முதன்மை நிர்வாகி விவேகானந்தன் நன்றி கூறினார்.

## கோத்தகிரி அருகே மண்வளத்தை மீட்டெடுக்க விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு!



நீலகிரி,டிச.27

ரசாயன உரங்களின் பயன்பாட்டால் சீரழிந்துள்ள மண்வளத்தை மீட்டெடுக்க விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே கருத்தரங்கு நடைபெற்றது.

கடந்த சில ஆண்டுகளாக விவசாய நிலங்களில் ரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் விவசாய பயிர்களில் நச்சுத்தன்மை அதிகரிப்பதுடன் மண் வளமும் சீரழிந்துள்ளது,

எனவே விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி தாய் மண்ணின் வளத்தை மீட்டெடுக்கும் நோக்கில் மத்திய அரசு சார்பில் கிசான் சங்கோஷ்டி எனப்படும் விவசாயிகள் கருத்தரங்கு நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக அங்கக மாவட்டமாக அறிவிக்கபட்டுள்ள நீலகிரி மாவட்டத்தில் கூக்கல்தொரை கிராமத்தில் விவசாயிகள் கருத்தரங்கு நடைபெற்றது. மத்திய அரசின் மெட்ராஸ் உர நிறுவனம் சார்பில் நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கில் தோட்டகலைத்துறை, வேளான்துறை, கே விகே மற்றும் மெட்ராஸ் உர நிறுவனத்தை சார்ந்த விஞ்ஞானிகள் மற்றும் வல்லுனர்கள் கலந்துகொண்டு ரசாயன உரங்கள் பயன்பாட்டால் மண்ணில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், விளைவிக்கும் பயிர்களில் உள்ள நச்சுத்தன்மை மற்றும் இயற்கை உரங்களை பயன்படுத்தி தாய் மண்ணின் வளத்தை மீட்டெடுக்கும் முறைகள் குறித்து எடுத்துரைத்தனர். இந்தக் கருத்தரங்கில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்தக் கருத்தரங்கு தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

பிரதம மந்திரியின் பிரணாம் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட இந்த கருத்தரங்கு நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாய நிலங்களின் மண் வளத்தை மீட்டெடுக்க ஒரு முன்னெடுப்பாக அமைந்துள்ளது.

## ரெயில் கட்டண உயர்வை மத்திய அரசு திரும்பப் பெறகோரி சர்வதேச மக்கள் உரிமைகள் கழகம் வலியுறுத்தல்!

ஒட்டன்சத்திரம் டிச.27

நாடு முழுவதும் ரெயில் கட்டணம் வருகின்ற டிச.26ம் தேதி முதல் உயர்த்தப்பட இருப்பதாக ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது ஏழை, நடுத்தர மக்களைப் பாதிக்கும், ஒன்றிய அரசு கட்டண உயர்வை திரும்பப்பெற வேண்டுமென சர்வதேச மக்கள் உரிமைகள் கழகம் நிறுவனத்தலைவர் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் திண்டுக்கல் எஸ்.முகமது ரிஜ்வான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கோரிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ரெயிலில் சாதாரண வகுப்புகளில் 215 கிலோ மீட்டர் தூரத்துக்கு மேல் பொதுமக்கள் பயணிக்க ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு பைசா உயர்ந்துள்ளது. அதே போல் ஏ.சி.மற்றும் ஏ.சி.அல்லாத மெயில், எக்ஸ்பிரஸ் ரெயில்களில் கிலோ மீட்டருக்கு 2 பைசா உயர்த்தப்படும் என ரெயில்வே நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. கட்டண உயர்வை அதிகப்படுத்தி வருவாயை பெருக்குவது என்ற வணிக நோக்கிலான திட்டம் தான் இது. ரெயில்வே துறையின் இந்த அறிவிப்பால் ரெயில்வே நிர்வாகத்திற்கு மட்டும்தான் லாபம் மற்றபடி சாமானிய, நடுத்தர பயணிகளுக்கு எவ்வித பயனும் இல்லை. குறிப்பாக ஏழை, நடுத்தர மக்களுக்கு பாதிப்புத்தான். ஏற்கனவே சாதாரண ரெயில்கள் இல்லாமல் அனைத்தும் எக்ஸ்பிரஸ்களாக மாற்றப்பட்டு கட்டண உயர்வை அறிவித்துள்ளன.

எனவே ஏழை, நடுத்தர பொதுமக்களை பாதிக்கும் ரெயில்வே கட்டண உயர்வை ஒன்றிய அரசு திரும்பப்பெற வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.



கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் நெடுங்கண்டம் உப கல்வி மாவட்டத்திலுள்ள சாஸ்தா நடை அரசு ஆரம்பப் பள்ளியில் பி . என் பணிக்கர் நினைவு நாளை முன்னிட்டு பள்ளி வாசிப்பு தின விழா கொண்டாடப் பட்டது இவ்விழாவிற்கு தலைமை ஆசிரியர் பாண்டு ரெங்கன் தலைமை தாங்கினார் ஆசிரியர் முருகன் வரவேற்புரை ஆற்றினார் ஆசிரியை சாரம்மா வாசிப்பு தினத்தின் முக்கியத்துவத்தையும் நாம் தினந்தோறும் வாசிப்பு பழகத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று மாணவ மாணவிகளுக்கு உறுதி மொழி வாசிக்கப்பட்டது மாணவர்கள் ஒவ்வொருவரும் வாக்கியங்களையும் வாசித்து காட்டினர் விழா முடிவில் ஆசிரியர் மணிகண்டன் நன்றி கூறினார்.

# வாணியம்பாடி அருகே துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஆலங்காயம் மத்திய ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் கிரிக்கெட் போட்டி!

வாணியம்பாடி, டிச.27

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே நிம்மியம்பட்டு பகுதியில் உள்ள சிறு விளையாட்டு அரங்கத்தில் ஆலங்காயம் மத்திய ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் துணை முதல் அமைச்சர் உதயநிதிஸ்டாலின்பிறந்த நாளை முன்னிட்டு 3 நாட்கள் கிரிக்கெட் போட்டி துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி. அன்பு தலைமை வகித்தார். மேற்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவேலன், கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.தாமோதரன், மாவட்ட மாணவரணிஅமைப்பாளர்தே.பிரபாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி.வடிவேல், துணை அமைப்பாளர் வி. வி.கிரிராஜ், மாவட்ட பிரதிநிதி சி. வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி. எஸ். கார்த்திக் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயலாளரும், ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்து கொண்டு கிரிக்கெட் அணி வீரர்களை அறிமுகம் செய்து வைத்துபின்னர்கிரிக்கெட் விளையாடி போட்டிகளை தொடங்கி வைத்தார்.

போட்டிகள் இன்று முதல் மூன்று நாட்கள் நடைபெறும். இதில் மொத்தம் 32 அணிகள் பங்கேற் விளையாட உள்ளனர். 27 ஆம் நிறைவு விழா நடைபெறும். இதில் வெற்றி பெறும் அணிக்கு முதல் பரிசாக ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி. எஸ்.ஞானவேலன் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கமும், கந்திலி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் எஸ்.கே.டி அசோக்குமார் ரூபாய் 30 ஆயிரம் இரண்டாம் பரிசும், மாவட்ட பிரதிநிதி சி. வெங்கடேசன், மிட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் எஸ். பிரபாகரன் சிவாஜி ஆகியோர் இணைந்து மூன்றாம் பரிசாக ரூபாய் 20 ஆயிரம் வழங்கியுள்ளனர்.

துவக்க நிகழ்ச்சியில் மிட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.பிரபாகரன் சிவாஜி, நிம்மியம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் தலைவரும், ஒன்றிய ஆதி திராவிட நலக்குழு அமைப்பாலருமான எம். வெங்கடேசன்,

ஆலங்காயம் மத்திய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.பிரபாகரன், ஆர்.சூர்யா, கே.சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.சத்தியப்பன் நன்றி கூறினார்.



# அன்பையே அனைத்து மதங்களும் போதிக்கின்றன கிறிஸ்துமஸ் விழாவில் அமைச்சர் கீதாஜீவன் பேச்சு!

தூத்துக்குடி,டிச.27

தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 15வது வார்டு பகுதியில் உள்ள செக்கானியா ஜெபத்தோட்டம் சார்பில் 15வது கிறிஸ்துமஸ் விழா இபி நகரில் நடைபெற்ற விழாவிற்கு செக்கானியா ஜெபத்தோட்டம் நிறுவனர்ராஜகு மார்தலைமை வகித்தார். பாதிரியார்ராபின்சன் ஜெபம் செய்தார்.

பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி 100 பேருக்கு சேலை வேஷ்டி வழங்கி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர்உரிமைத்துறை அமைச்சர்கீதாஜீவன் பேசுகையில் பாலகன் பிறப்பு கிறிஸ்துமஸ் விழாவாக கொண்டாடப்படுகிறது. ஏழை எளியவர்களுக்கு உதவிகள் செய்வது கடவுளுக்கு கொடுப்பதற்கு சமம் நாம் செய்கின்ற ஒவ்வொரு உதவிகளும் அன்பும் தான் எல்லோரையும் அரவணைத்து நல்வழிப்படுத்தி அழைத்து செல்லும் செயலாகும் இங்கு நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் பங்கெடுத்துக்கொண்ட அனைவருக்கும் முக்கிய காரணமாக இருந்து ஊக்கப்படுத்துவது பெற்றோர்கள் தான் போட்டியில் வெற்றி தோல்வி முக்கியமல்ல.

தனிநபர்கடனாக தொழில்செய்வதற்கு 10 லட்சம் வழங்கப்படுகிறது. அதில் ஏழைரை லட்சம் கட்டினால் போதும் இரண்டரை லட்சம் மாணியம் எனக்கு ஒரு லட்சம் போதும் என்றால் 75 ஆயிரம் மட்டும் கட்டினால் போதும் 25 ஆயிரம் மானியம், அதே போல் ஆண்கள் ஆதிதிராவிடர்துறையிலும் தொழில்கடன் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது. மகளிர்உரிமைத்தொகை தமிழகத்தில் 1 கோடியே 31லட்சம் போ் ரூ 1000 வீதம் பலனடைகிறார்கள். ஆண் பெண் இரு பாலருக்கும் கல்லூரிஉதவித்தொகை ரூ 1000 வழங்கப்படுகிறது மாற்றுத்திறனாளிகள் எங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று கணக்கெடுக்கப்பட்டு அவர்களுக்கும் மாதம்தோறும் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

கிறிஸ்துமஸ் விழா வாழ்த்துக்களுடன் 2026ம் ஆண்டு எல்லோருக்கும் செல்வ செழிப்போடு அமைந்து வாழ்க்கை தரம் உயர்ந்து சிறப்பாக அமைய வேண்டும் என்று வாழ்த்துக்கிறேன். என்று பேசினார். முன்னதாக நடைபெற்ற மியூசிக் கைப்பந்து விளையாட்டு போட்டியும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அமைசசர் கீதாஜீவனுக்கும் பாிசுகள் வழங்கப்பட்டது.

விழாவில் மாநகர திமுக செயலாளர்ஆனந்தசேகரன், வட்டச்செயலாளர்பொன்பெருமாள் கவுன்சிலர்கள் இசக்கிராஜா, கண்ணன், மாநகர திமுக இலக்கிய அணி தலைவர் சக்திவேல், அமைப்பாளர்ஜீவன்ஜேக்கப் இளைஞர் அணி அமைப்பாளர் அருண்சுந்தர், வட்டப்பிரதிநிதிகள் கணேசன், பாஸ்கர், முன்னாள் அறங்காவலர்குழு தலைவர் செந்தில்குமார், மற்றும் பொ்வின் ராஜகுமாரி, விஜயா, ராமஜெயம், தொழிலதிபர்சித.டேவிட் பொன்பாண்டியன், உள்பட பலர் கலந்து கொண்டனர். ராபின் நன்றியுரையாற்றினார்.



இந்திய குடியரசு கட்சி மற்றும் இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்கம் இணைந்து, சேலம் கோட்டை மைதானத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில், சேலம் பனமரத்துப்பட்டி, நாழிக்கல்பட்டி, காந்திநகர், அம்பேத்கர் நகர், உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் 96 குடும்பங்களுக்கு அரசின் இலவச வீட்டுமனை பட்டா வழங்க கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# ‘நான் முதல்வன்’ திட்டத்தில் படித்த ராசிபுரம் இளம்பெண் வங்கி பணியாளராக தேர்வு!

ராசிபுரம்,டிச.27



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த அத்தனூர் பேரூராட்சி ஏழாவது வார்டு கலைஞர் தெருவை சேர்ந்தவர் ஜெகநாதன் விசைத்தறி கூடம் நடத்தி வருகிறார் இவரது மனைவி விஜயலட்சுமி 49 இவர்களுக்கு நவீன் குமார் என்ற மகனும் கமலி மகளும் உள்ளனர். இந்நிலையில் கமலி பள்ளி படிப்பை தனியார் பள்ளியில் முடித்துவிட்டு நாமக்கல்லில் உள்ள தனியார் கல்லூரியில் கணித பாடத்தில் இளநிலை பட்டப்படிப்பு முடித்துள்ளார் கடந்த சில மாதங்களாக தனியார்பயிற்சிநிறுவனத்தில்இவர்வங்கித்தேர்வுக்காக பயிற்சி பெற்று வந்துள்ளார். மேலும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் சேலத்தில் பயிற்சி பெற்று வந்துள்ளார் இந்நிலையில் சமீபத்தில் பாரத ஸ்டேட் வங்கி தேர்வில் முதல் முயற்சியிலேயே வென்றுள்ளார்.

இது குறித்து மாணவி கமலி கூறும்போது,

தனியார் பயிற்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசின் கட்டணமில்லா பயிற்சி நான் முதல்வன் திட்டத்தில் பயின்று பாரத ஸ்டேட் வங்கியில் பணியராக தேர்வு ஆகி இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது எனக்கு பெரிதும் உறுதுணையாக இருந்த எனது தாய் தந்தைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறே என்றார்.



# திருப்பத்தூரில் 75-வது கபடி போட்டி துவக்க விழா!

திருப்பத்தூர் டிச.27

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் அமைந்துள்ள தூய நெஞ்சக் கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு மாபெரும் கபடி போட்டி "சடு குடு" 75 துவக்க விழா நடைபெற்றது.

மாண்புமிகு கைத்தறி , துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி, விஐடி பல்கலைகழக வேந்தர் டாக்டர்.ஜி.விஸ்வநாதன், மாவட்ட ஆட்சியர் க. சிவசௌந்திரவள்ளி இ.ஆ.ப. பங்கேற்று விழாவினையும், போட்டியினையும் துவக்கி வைத்தனர்.

மாவட்ட திமுக க செயலாளர் , ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி வாழ்த்து ரைற்றினார்.

இந் நிகழ்வில் மாவட்ட , நகர கழக நிர்வாகிகள் , கல்லூரி நிர்வாகத்தினர் , போட்டி ஏற்பாட்டாளர்கள் , விளையாட்டு வீரர் , வீராங்கனைகள் , பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# பாலக்கோடு அருகே ஊருக்குள் வராமல் சென்ற தனியார் பேருந்தை சிறைபிடிப்பு பொதுமக்கள்!



பாலக்கோடு,டிச.27

தர்மபுரி மாவட்டம், தர்மபுரி ஓசூர் பேருந்து நிலையத்தில் இருந்து புலிக்கரை, சோமனஅள்ளி, பாலக்கோடு, வெள்ளிசந்தை, சூடப்பட்டி, பிக்கனஅள்ளி, மல்லுப்படி வழியாக தருமபுரி ஓசூர் சென்று வந்த தனியார் பேருந்துகள், ஊருக்குள் வராமல் அதியமான் கோட்டை ஓசூர் புதிய தேசிய நெடுஞ்சாலை வழியாக செல்வதால் வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள், அலுவலகத்திற்க்கு செல்லும் பணியாளர்கள், பள்ளி கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்கள் பேருந்திற்காக காத்திருந்து ஏமாற்றம் அடைந்து வருவதுடன், உரிய நேரத்தில் செல்ல முடியாமல் அவதியடைந்து வருகின்றனர்.

இதுகுறித்து பல முறை பொதுமக்கள் போராட்டம் நடத்தியும், புகார் தெரிவித்தும் பேருந்து உரிமையாளர்கள் கண்டு கொள்ளாததால் பொதுமக்களே பேருந்தை சிறை பிடித்து வரும் அவல நிலை ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் இன்று காலை தர்மபுரியில் இருந்து ஓசூர் நோக்கி சென்ற தனியார் ராஜம் பேருந்து சூடப்பட்டி, பிக்கன அள்ளி, மல்லுப்பட்டி வழியாக செல்லாமல் வெள்ளிசந்தையில் இருந்து கொலசனஅள்ளி வழியாக தேசிய நெடுஞ்சாலையில் செல்ல முயன்றது.

இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் வெள்ளிசந்தை 4 ரோடு அருகே பேருந்தை சிறை பிடித்து டிரைவர், கண்டக்டரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த மகேந்திரமங்கலம் போலீசார் சம்பவ இடத்திற்க்கு வந்து பேருந்து ஓட்டுநர், நடத்துனரிடம் அனுமதிக்கப்பட்ட வழி தடத்தில் பேருந்தை இயக்க எச்சரித்ததை தொடர்ந்து பேருந்து சூடப்பட்டி, பிக்கனஅள்ளி, மல்லுப்பட்டி வழியாக சென்றது.

இதனால் சுமார் ஒரு மணி நேரம் பாலக்கோடு ஓசூர் நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

இது போன்ற சம்பவம் இப்பகுதியில் அடிக்கடி ஏற்பட்டு வருவதாகவும், புகார் அளித்தாலும் வட்டார போக்குவரத்து அலுவலர் கண்டு கொள்வதில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# ஒகேனக்கல் கணவாய் பகுதியில் டூரிஸ்ட் வேன் கவிழ்ந்தது!

## பயணிகள் காயத்துடன் உயிர் தப்பினர்!!

பென்னாகரம், டிச.27

தர்மபுரி மாவட்டம் அரூர் அடுத்த பையர்நாயக்கன்பட்டி பகுதியில் இருந்து ஒகேனக்கல்லிற்கு ஈமச்சடங்கிற்காக 20க்கும் மேற்பட்ட நபர்களை ஏற்றி சென்ற வாகனம் ஒகேனக்கல் கணவாய் பகுதியில் ஓட்டுனரின் கட்டுப்பாட்டைஇழந்துகவிழ்ந்து விபத்துக்குள்ளாகின.



ஒகேனக்கல் மலைப்பாதையில் பள்ளத்தை நோக்கி சென்று கொண்டிருந்த அந்த வாகனம் ஆஞ்சநேயர் கோவில் அருகே சென்றபோது பிரேக் பிடிக்காததால் கட்டுப்பாட்டை இழந்ததாக கூறப்படுகிறது. இதனை அறிந்த வாகன ஓட்டுநர் சாமர்த்தியமாக செயல்பட்டு வாகனத்தை நிறுத்த முற்பட்டுள்ளார். குறிப்பாக பள்ளத்தை நோக்கி சென்ற வாகனம் வேகமாக சென்றதைத் தொடர்ந்து சாலையின் ஓரத்தில் இருந்த மலை மேட்டின் மீது வாகனத்தை இயக்கி பின்பு இந்த டூரிஸ்ட் வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி இருக்கிறது. அவ் வழியாக சென்ற சுற்றுலா பயணிகள் விபத்தில் சிக்கிய பயணிகளை உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் பென்னாகரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். உடனடியாக காவல்துறையினர் வாகனத்தை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர்படுத்தினர்.

# கெங்கவல்லியில் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு!

## வாலிபர் கைது!!

தம்மம்பட்டி, டிச. 27



சேலம் மாவட்டம், கெங்கவல்லியை சேர்ந்த 16 வயது சிறுமி, 8 ஆம் வகுப்புவரை படித்துவிட்டு, பெற்றோருடன் கூலி வேலைக்கு சென்று வருகிறார். அந்த சிறுமியை திடிரென காணாததால், அவரது பெற்றோர், ஆத்தூர் மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், கெங்கவல்லியை சேர்ந்த லாரி கிளீனரான லோகநாதன் (23) என்பவர் அந்த சிறுமியை கடத்தியதும், சிலநாட்களுக்கு முன் அவரை, அவரது வீட்டிற்கு அனுப்பியதும் தெரிந்தது. மேலும் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு செய்ததும் தெரிய வந்தது. அதையடுத்து, போலீசார் அவரை தேடியபோது, திருப்பூரில் இருப்பது தெரிந்தது. அங்கு சென்ற போலீசார், லோகநாதனை கைது செய்து, ஆத்தூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, சேலம் மத்தியசிறையில் அடைத்தனர்.



# பாமக மாநில சிறப்பு பொதுக்குழுவிற்கு அனுமதி கோரி சேலம் காவல் ஆணையாளரிடம் மனு!

சேலம்,டிச.27

பாமக மாநில சிறப்பு பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம். வருகின்ற 29ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, சேலத்தில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, இன்று பொதுக்குழு கூட்டத்திற்கு அனுமதி வழங்க கோரி, சேலம் மாநகர மாவட்ட பாமக செயலாளர் கதிர் ராஜரத்தினம் தலைமையிலான பாமகவினர். சேலம் மாநகர காவல் ஆணையாளரிடம் பொது குழு கூட்டத்திற்கு அனுமதி வழங்க கோரி இன்று கடிதம் அளித்தனர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பாமக செயலாளர் பதவி ராஜரத்தினம் கூறும் போது, உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, அன்புமணி தரப்பினர் பாமகவின் கொடியையோ அல்லது கட்சியின் சின்னத்தையோ பயன்படுத்த முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் தொடர்ந்து கட்சியை பற்றி தவறாக சித்தரித்து வருவதாகவும், இனிமேலும் இது தொடர்ந்தால் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பெருமாள் பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் கருணை இல்லத்தில், வாணியம்பாடி வணிகர்கங்களின் பேரமைப்பு சார்பில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாவட்ட செயலாளர் கே.பி.எஸ் மாதேஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு கேக் வெட்டி கிறிஸ்மஸ் வாழ்த்துகளை தெரிவித்தனர். மேலும் கருணை இல்லத்தில் வசித்து வரும் ஆதரவற்ற மாணவர்கள், முதியவர்கள் அனைவருக்கும் இனிப்பு மற்றும் பரிசு பொருட்கள் வழங்கினர். முடிவில் கருணை இல்ல நிறுவனர் டேவிட்சுபாஷ் சந்திரன் நன்றி கூறினார்.



பென்னாகரம் தி.மு.க. தெற்கு ஒன்றியம் சார்பில் சின்னம்பள்ளி ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை செயல் திட்ட கூட்டம் ஒன்றிய பொறுப்பாளர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.